මුදල්, ක්‍රමසම්පාදන සහ ආර්ථික සංවර්ධන අමාත්‍යාංශය
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
MINISTRY OF FINANCE, PLANNING AND ECONOMIC DEVELOPMENT

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව.
செயலகம், கொழும்பு 01. இலங்கை.
The Secretariat, Colombo 01. Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011 - 2484500, 011 - 2484600, 011 - 2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011 - 2449823
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.: BD/NSLE/103/DMD/09/2025
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2025.12.01

**வரவுசெலவுத்திட்ட சுற்றறிக்கை: 06/2025**

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
மாவட்டச் செயலாளர்கள்/ அரசாங்க அதிபர்கள்
திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்,

**அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் வாழ்வினை துரிதமாக இயல்பு நிலைக்கு கொண்டுவருதல்**

தற்பொழுது ஏற்பட்டுள்ள அனர்த்த சூழ்நிலையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் வாழ்க்கையினை இயல்பு நிலைக்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை பொருட்கள், பணிகள் மற்றும் ஆலோசனை அல்லாத சேவைகளுக்கான பெறுகை வழிகாட்டுதல்கள் மற்றும் கையேடு - 2024 இன் 3.1.8 பிரிவின் கீழ் எவ்வித தடையுமின்றி துரிதமாக முன்னெடுக்குமாறு தெரிவித்துக் கொள்கிறேன்.

02. மேற்கண்ட வழிகாட்டுதல்கள் மற்றும் கையேட்டின் 2.9 பிரிவின் கீழ் பிரதான கணக்கீட்டு அலுவலர்களுக்கு ரூபா 750 மில்லியன் நிதி வரையறை வழங்கப்பட்டுள்ளது. அதேபோன்று திணைக்கள தலைவர் ஒருவர் ரூபா 400 மில்லியன் நிதி வரையறைக்குள் செயற்படுவதற்கு முடியும். இதன் பிரகாரம், பிரகடனப்படுத்தப்பட்டுள்ள விரிவான அனர்த்த நிலைமையின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய செலவினத்தினை எவ்வித தடையுமின்றி துரிதமாக மேற்கொள்வதற்கு அமைச்சுக்களின் செயலாளருக்கும் மாகாண பிரதம செயலாளருக்கும் ரூபா 150 மில்லியன் வரையும் திணைக்கள தலைவர், மாவட்டச் செயலாளர் / அரசாங்க அதிபர் ஒருவருக்கு ரூபா 100 மில்லியன் வரை செலவினங்களை மேற்கொள்ள முடியும் என மேலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

03. மேற்படி வரையறைகளை விஞ்சியதாக செயற்பட தேவை ஏற்படின் உடனடியாக திறைசேரி செயலாளருக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

04. இந்த சுற்றுநிருபம் தேசிய பெறுகை ஆணைக்குழுவின் இணக்கப்பாட்டுடன் வெளியிடப்படுகின்றது.

**ஒப்பம்/-**
**கலாநிதி ஹர்ஷன சூரியப்பெறும**
**திறைசேரியின் செயலாளர்**

பிரதிகள் :

1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவையின் செயலாளர்
4. தலைவர், நிதி ஆணைக்குழு
5. தலைவர், பெறுகை ஆணைக்குழு
6. கணக்காய்வாளர் நாயகம்

(இது தொடர்பான மேலதிக விளக்கங்களை பெறுகை ஆணைக்குழுவின் செயலாளர் நாயகத்தினை 071-5348638 என்ற தொலைபேசி இலக்கத்திலும், பெறுகை ஆணைக்குழுவின் பணிப்பாளர் (கொள்கை) அவர்களை 071-8174116/071-6421698 என்ற தொலைபேசி இலக்கத்திலும் தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.)